பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# கொங்குச்சோழர் கல்வெட்டுகளில் ஊராளி பழங்குடிகளின் சமூகப் பொருளாதார நிலை

பெ. இந்துஷா
முனைவர்பட்ட ஆய்வாளர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
மின்னஞ்சல்: indusha2817@gmail.com
நெறியாளர்: முனைவர் மா. பவானி
இணைப்பேராசிரியர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் பழங்குடிகளின் வாழ்கை முறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்றே கூறலாம். இதற்குச் சான்றுகளாக சங்க இலக்கியங்களும், கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உள்ளன. பொதுவாக பழங்குடிகள் பற்றிய ஆய்வு என்பது செவிவழிச் செய்திகளோடு மட்டுமின்றி எழுத்துப்பூர்வமான சான்றாதாரங்களோடும் உற்றுநோக்க வேண்டும். ஊராளி பழங்குடிகள் என அடையாளப்படுத்தும் இனக்குழுக்கள் பற்றிய தரவுகள் கல்வெட்டுகளில் காண கிடைக்கின்றன. கல்வெட்டுகளில் சோழர்காலம், பாண்டியர் காலம், போசாளர்கள் மற்றும் விஜயநகர காலக்கட்டங்களில் ஊராளி பழங்குடிகளின் வாழ்க்கை முறைகளில் நிகழ்ந்த மாற்றங்களை நம்மால் அறிய முடிகிறது. கல்வெட்டுகள் வழி நோக்கினால் ஊராளிகளின் வாழ்க்கை முறையானது ஒவ்வொரு காலக்கட்டதில் மாற்றம் பெற்றதோடு இடத்திற்கு ஏற்றவாரும் மாற்றம்பெற்றுள்ளனர். ஏனென்றால் ஒரு பகுதியில் கிடைக்ககூடிய கல்வெட்டில் சமூகத்தில் நன்மதிப்புடன் இருந்தமைப் பற்றியும் ஒரு சிலப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய கல்வெட்டுகளில் வரி செலுத்தும் இனக்குழுவாகவும் இருந்துள்ளனர். இன்றளவும் ஊராளிகளிடம் வழக்கத்திலுள்ள இறப்புச் சடங்கில் கல் நடும் வழக்கத்தை பொ.ஆ 11 ஆம் நூற்றாண்டில் ஊராளிகள் எடுப்பித்த நடுகல் கல்வெட்டு வழி ஒப்பாய்வு செய்யமுடிகிறது. இதேபோன்று இக்கட்டுரையானது சோழர்காலத்தில் ஊராளி பழங்குடிகளின் வாழ்வில் நிகழ்ந்த சமூகப் பொருளாதார நிலைப் பற்றி விவரிக்கிறது.

**திறவுச்சொற்கள்:** கல்வெட்டுகள் - ஊரும் ஊராளிகளும் – ஊராளித்திறை - நடுகல்

**முன்னுரை**

ஊராளிகள் தமிழகத்தில் கொங்குப் பகுதிகளில் வாழும் பழங்குடிச் சமூகமாகும். வேட்டைச் சமூகத்திலிருந்து ஆயர் வாழ்க்கையை மேற்கொண்டு வரும் பழமையான இனக்குழுக்களான இவர்கள் தமிழ்நாடு மட்டுமின்றி கேரளா, கருநாடகா போன்ற பிற மாநிலங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். ஊராளிப் பழங்குடிகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன. ஊராளி என்பவர்கள் யார் தற்போதுள்ள ஊராளிப் பழங்குடியினரைப் பற்றிதான் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெற்றுள்ளனவா என்பது ஆய்வுக்குரியதாகும். அவ்வாய்வுகளில் குறிப்பிட்டுள்ள செய்திகளையும் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள செய்திகள் மற்றும் கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்ற இடங்கள் வழி ஒப்பாய்வு செய்துப் பார்த்தால் தற்போதுள்ள ஊராளி பழங்குடியினரைப் பற்றித்தான் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன என்று கருத இடமுண்டு. ஊராளிகள் பற்றிய ஆய்வில் கொங்குச் சோழர்கள் கல்வெட்டுகளை மட்டுமே சான்றாக கொண்டு

சோழர்காலத்தில் ஊராளிகளின் சமூகப் பொருளாதார நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. மேலும் ஊராளிகள் என்ற பெயர் இடம்பெற்றுள்ள சோழர் மற்றும் கொங்குச் சோழர் கால கல்வெட்டுகள் மட்டுமே இவ்வாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ளன.

**ஊராளி பெயர்க் காரணம்**

ஊராளி என்பதற்கு பல்வேறு பெயர் காரணங்கள் உள்ளன. ஊரில் வாழ்ந்தவன் ஊரன் என்றும் ஊரையாண்டவன் ஊராளி என்றும் பெயர் பெற்றதாக மா.இராசமாணிக்கனார் 'தமிழ் இனம்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் லெக்ஸிகன் ஊராளிகளை 'ஊரதிகாரி" மற்றும் விவசாயத் தொழில் புரியும் ஒருவகைச் சாதியன், மலைச்சாதியன் என்ற குறிப்புகளைத் தருகின்றது. கல்வெட்டுச் சொல்லகராதியில் ஊராளி என்பதற்கு 'ஒரு சாதி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. மேலும் சி. மகேசுவரன், என்பவரின் 'பண்பாட்டு ஆய்வியல்' பண்பாட்டியல் குறித்த முழுதளாவிய பார்வை என்ற நூலில் ஊராளி என்பதற்கு 'மலைச்சார்ந்த பகுதிகளில் வாழ்வோர்' என்று பொருள் கூறப்பெற்றுள்ளது. இத்தகையச் சான்றுகளைக் கல்வெட்டுச் சான்றுகளின் வழி நோக்கினால் ஊராளிகள் இடைக்காலத்தில் நில உடமையாளர்களாகவும், நிர்வாகப் பொறுப்புகளிலும் அங்கம் வகித்துள்ளமையை அறிய இயலும். இதன் காரணமாகவே ஊராளி என்பதற்கு ஊரை ஆள்பவர்கள் என்று பொருள் கூறப்படுகிறது எனக் கொள்ளலாம்.

**ஊராளிகளின் மரபு வழி**

ஊராளிகளின் மரபுவழி என்ன என்பதைப் பற்றி பல ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். ஊராளிகள் பில்லையா என்னும் மூதாதையர் வழி வந்தவர்கள் என்று கூறுகின்றன. பின்பு சோழர் குலத்துடன் இப்பழங்குடிகள் தொடர்புடையவர்களாக இருப்பதால் சோழரும் ஊராளியும் காரையன் எனும் மூதாதையரின் வழித்தோன்றல் என்றும் கூறுவர். இதற்குச் சான்றாக ஊராளிகள் பற்றி கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளிலும் அவர்களின் பெயரோடு மரபு வழிப் பெயர்களும் குறிப்பிடப்பெற்றுள்ளன. காட்டாக கல்வெட்டுகளில் '..ஊராளிகளில் கள்ளை வேட்டுவரில் தன் ஊராளி சடையாரும் பிள்ளை' 'கள்ளை வேட்டுவ ஊராளிகளில் கடுஞ்சொக்கந் வலிய சொக்கநேந்' ...தெ(ன்) பூவாணிய நாட்டில் குளக்குறிச்சியில் ஊராளிகளில் பாத வேட்டுவரில் பிள்ளப்பன் உடையாநேன்... என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊராளிகளுக்கு ஏழு குலப்பிரிவுகள் உள்ளதாக வாழ்வியற் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சி.மகேசுவரன், '(பண்பாட்டு ஆய்வியல்)' மற்றும் கொங்கு களஞ்சியத்தில் ஊராளிப் பழங்குடியினரின் பேச்சு மொழிகள் மற்றும் சில பழக்கவழக்கங்கள் இருளர் பழங்குடியினரிடையே ஒத்துக் காணப்படுவதால் ஊராளிகள் இருளர் வழி வந்தோராக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

**கல்வெட்டுகளில் ஊராளிகள்**

ஊராளி பற்றியக் கல்வெட்டுகள் பொ.ஆ 10 – ஆம் நூற்றாண்டிலிருந்து பொ.ஆ 18-ஆம் நூற்றாண்டு வரை காணக் கிடைக்கின்றன. கொங்குப் பகுதியான திண்டுக்கல், திருப்பூர், கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் மொத்தம் 2348 கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் சோழர் மற்றும் கொங்குச் சோழர்கள், கொங்குப் பாண்டியர்கள், போசளர்கள், விஜயநகர மன்னர்கள் போன்ற அரசுகளின் காலத்தில் வெளியிடப்பெற்ற 30 கல்வெட்டுகள் மட்டுமே ஊராளிகள் பற்றியச் செய்திகளைத் தருகின்றன. இவற்றுள் சோழர் மற்றும் கொங்குச் சோழர்கள் காலத்தில் வெளியிடப்பெற்ற ஊராளிகள் பற்றி ஒன்பது கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் ஊராளிகளின் சமூகப் பொருளாதார நிலைப் பற்றிக் காட்டுகின்றன. ஒவ்வொரு அரசுக் காலக்கட்டங்களிலும் ஊராளிகளின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பொதுவாக பொ.ஆ 10 - 12-ம் நூற்றாண்டுகளில் பழங்குடிகளின் வாழ்க்கை முறைகள் செழித்தோங்கியது போன்று பொ.ஆ 15 – 16 ஆம்

நூற்றாண்டுகளில் பழங்குடிகளின் வாழ்க்கை முறைகள் சிறப்புற்றிருக்கவில்லை என்பதற்கு விஜயநகரக் காலக் கல்வெட்டொன்றுச் சான்றாக உள்ளது (ARE.1920,No.240). இக்கல்வெட்டில் ஊராளி பழங்குடிகளின் சில உரிமைகளை நீக்கி நிலத்தில் வரும் பாதி வருவாயை ஊரில் உள்ள கோவிலுக்கும் உயர் குடியினருக்கும் வழங்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு ஒரு தாழ்குடிகளின் வளர்ச்சியைத் தடுத்து அவர்களை கீழ்நோக்கி நகர்த்தும் நிகழ்வாக அமைந்துள்ளது. அதேப்போன்று சோழர் காலத்தில் ஊராளிகளின் வாழ்வில் சில மாற்றங்கள் நிகழ்ந்து அவர்களின் வாழ்க்கை முறைகள் சமூகத்தில் சிறப்புற்றிருந்தது என்றே கூறலாம். கொங்குச் சோழர் கல்வெட்டுகளில் ஊராளிகளுக்கு அரசு கோயில் தேவதான நிலங்களை உரிமையாக்கி கொடுத்தல், கோயிலுக்குக் கொடை வழங்குதல், விளக்கெரித்தல், கோயிலெழுப்பித்தல் போன்ற செய்திகள் இதற்குச் சான்றாக உள்ளன. ஊராளிகள் தமிழகத்தில் பரவலாக வாழ்ந்து வந்தாலும் ஊராளிகள் பற்றிய கல்வெட்டுகள் கொங்கு பகுதியில்தான் அதிக அளவில் கிடைக்கப்பெறுகின்றன.

**ஊராளித் திறை**

இக்கல்வெட்டு சோழ மன்னன் இரண்டாம் ஆதித்தன் காலத்தில் 3 ஆவது ஆட்சியாண்டில் பொ.ஆ 0959 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றவையாகும். ஊராளி பற்றிய செய்தி இடம்பெற்றுள்ள முதல் கல்வெட்டு இதுவேயாகும். இக்கல்வெட்டு மெய்கீர்த்தியொடு ”ஸ்வஸ்திஶ்ரீ வீரபாண்யன்றலை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 3 ஆவது” என்று தொடங்குகிறது.

பார்க்கவகோத்தரத்து மிலாடுடையான் அகலங்கன் மலையராதித்தனான செம்பியன் மிலாடுடையான் என்பவன் துறிலி நாட்டு ஊராளிகளுக்கு நாற்கழஞ்சே கால் வரி விதித்துப் பெற்றுக் கொள்ள உறுதி அளித்தமைப் பற்றிக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது. செம்பியன் மிலாடுடையான் என்பவன் அக்காலத்தின் குறுநில மன்னனாவான். ஊராளித்திறை என்பது ஊராளி சமூகத்திற்கு விதிக்கப்பெற்ற ஒரு வித வரியாகும்.



இவ்வரியை பணமாகச் செலுத்தாமல் பொன்னாகச் செலுத்தியுள்ளனர். இக்கல்வெட்டு சேலம் மாவட்டம் பேளூரில் உள்ள தான்தோன்றீசுவரர் கோயிலில் உள்ளது.

**நடுகல் எடுக்கும் வழக்கம்**

ஊராளி பழங்குடி மக்கள் இறப்புச் சடங்குகளில் இறந்தோருக்கு இடுகாட்டில் பிணம் புதைத்த மறுநாள் ஒரு கல் நடும் வழக்கத்தை இன்றளவும் கடைபிடித்து வருவதாக குறிப்பிடுகின்றனர். (சி.மகேஸ்வரன், 2023, ப.241). பொதுவாகவே சங்ககாலம் முதற்கொண்டே மக்களிடையே நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் பொ.ஆ 1131 இராஜேந்திர சோழனுடைய 19 ஆவது ஆட்சியாண்டில் ஊராளிகள் வீரன் ஒருவனுக்கு எடுத்த நடுகல் ஒன்று உள்ளது.

1. ஶ்ரீ ராஜேந்ர சோழதேவற்கு யாண்டு
2. பத்தொந்பதாவது பந்த
3. ணாட்டு வாணபுரத்தூராளி காவிதி
4. வீரசோழ வாணராயந்நாத
5. மாசாந் பவத்துக் காலி பாஞ்சு
6. போகா நிற்கக் காலி மீட்டு பட்டாந்
7. இவநுக்கு ஊரும் ஊராளிகளும்
8. சேது குடுத்த பரிசாவது ஊருக்குத்
9. தெந்நருகே தெந்நிட்டேரிக்கு கீழ்

10. பாடைத்தாவ நேத்தற் பட்டி இட்டுக் குடுத்தோம்...

இக்கல்வெட்டு ஊருக்கு தெற்கெல்லையில் உள்ள நடுகல்லாகும். இராஜேந்திர சோழனுடைய 19 ஆவது ஆட்சியாண்டில் பந்த நாட்டு வாணபுரத்தூராளி காவிதி (கணக்கர்) வீரசோழ வாணாரையானான மாசந் என்பவன் ஆநிரைகளை மீட்டு உயிர்நீத்தான். இவனுக்கு ஊரும் ஊராளிகளும் சேர்ந்து ஊருக்குத் தெற்கில் உள்ள தென்னிட்டேரி பாசண நிலங்களை இறையிலியாக கொடுத்ததாகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலி என்பது பசுக்கூட்டங்களைக் குறிக்கும் (தமிழ் லெக்சிகன், தொ-2,பக்.898)

**கோயிலெடுப்பித்தல் மற்றும் விளக்கெரித்தல்**

பொ.ஆ 1229 வீரராஜேந்திரனுடைய 22-ஆவது ஆட்சிக்காலத்தில் பாண்டு வேட்டுவரில் புன்னத்தில் உள்ள ஊராளி மகள் பாண்டாண்டி என்பவர் வாகீஸ்வரர் கோயிலுக்கு சந்தியா தீப விளக்கு வைத்துள்ளார். (...வடகரை நாட்டில் புன்னத்திலிருக்கும் பாண்டிவேட்டுவரில் புன்னத்தூராளி மகள் பாண்டாண்டியேந் (யாநே) உடையார்க்கு குடுத்த அச்சு கொண்டு அன்றாடு குடுங்கொடு கோயில் புகுவான் சந்தியா தீப விளக்கும்...)

அதேப்போன்று பொ.ஆ 1230 கொங்கு சோழர் வீரராஜேந்திரனுடைய 27வது ஆட்சி ஆண்டில் உலக விடங்கத்தைச் சேர்ந்தக் கள்ளை வேட்டுவரில் ஊராளிகள் கருஞ்சொக்கன் வலிய சொக்கன் ஆகிய இருவரும் வாகீஸ்வரர் கோயிலில் குன்றமெறிந்த பிள்ளையாரை எழுந்தருள செய்து கோயிலும் எடுப்பித்துள்ளனர். மேலும் பொ.ஆ 1244 வீரராஜேந்திரனுடையா 38வது ஆட்சியாண்டில் பட்டில் ஊராளிகள் கொடும்பு வேட்டுவரின் பெரிய தேவன் மகன் பெரியபிள்ளையான பெரிய தேவன் என்பவர் வாகீசுவரர் கோயிலுக்கு சந்தியா தீப விளக்கு வைத்துள்ளனர். (....வடகரை நாட்டில் பட்டியலிருக்கும் ஊராளிகளில் கொடும்பு வேட்டுவரின் பெரிய தேவன் மகன் பெரிய பிள்ளையான பெரிய தேவனின் நாயனார் வாகீஸ்வரர் உடையார்க்கு சந்தியா தீபம் 3 விளக்கு இருப்பதாக கோயில் செய்கிற பிராமணர் கை கொண்ட அச்சு...)

இக்கல்வெட்டுகள் ஈரோடு மாவட்டம் பவானி பகுதியில் உள்ள பட்லூர் மற்றும் உலகடம் பகுதிகளைச் சேர்ந்த வேட்டுவ ஊராளிகள் கல்வெட்டுகளாகும்.

**நிர்வாகத்தில் ஊராளிகள் மற்றும் ஊராளிகளின் நிலக்கொடைகள்**

ஊராளிகள் சோழர் காலத்தில் நன்மதிப்புடன் இருந்தனர் என்பதற்கு கொங்கு சோழர் குலோத்துங்கன் மற்றும் வீரராஜேந்திரனுடைய கல்வெட்டுகள் சான்றாக உள்ளன. ஈரோடு மாவட்டம் பவானி உலகடத்தில் உள்ள உலக விடங்கேஸ்வரருக்கு உலக விடங்கத்தைச் சேர்ந்த ஊராளிகளில் கள்ளை வேட்டுவரில் ஊராளி சடைய நம்பிள்ளை என்பவன் கொடையளித்தது பற்றிக் கல்வெட்டு குறிப்பு உள்ளன. இக்கல்வெட்டு பொ.ஆ1230 குலோத்துங்க சோழனுடைய 5வது ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற கல்வெட்டாகும். கொடைகள் பற்றிக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை. மேலும் கல்வெட்டுகள் சிதைந்துள்ளன.

பொ.ஆ 1237 ஆம் ஆண்டு வீரராஜேந்திரனின் 31வது ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று வடகரை நாட்டுப் பட்டில் ஊராளிகளும் நடுவில் நித்தியகண்ட சக்கரவர்த்திகளும் வாகீஸ்வரர் கோயிலில் பணிபுரியும் (பூசிக்கும்) நம்பியார் பட்டில் காணியாளருக்கும் மற்றுமொரு காணியாளரான பாரசிவர் பூமன் வன்னியனான வீரபத்ர சக்கரவர்த்திக்கும் மாணபோகமாக நிலக் கொடை வழங்கியுள்ளனர்.(...மேக்கடுக்கு கல்லுக்கு மறைக்கும் கிழக்கு பிடாரியர் தேவதானத்துக்கு மேற்கும் தெற்கு இட்டேறிக்கு வடக்கும் இவ்வெள்ளைக்கு உட்பட்ட நிலமும் இந்நாயனாற்கு பூசிக்கும் நம்பியர் பட்டில் காணியாளருக்கும் மாணபோகத்துக்கும் பட்டில் காணியாள உவச்சரில் பாரேசிவர் பூமந் வந்நியநாந வீரபத்திர சக்கரவர்த்திக்கு மாணபகம்...) இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள உவச்சரில் பாரசிவர் என்பவர் ஒரு இசைக்கலைஞர் ஆவார்.

மேலும் அதேப் பகுதியைச் சேர்ந்த பட்டில் ஊராளிகள் பசுங்கண்ணித் தாழை என்ற

ஏரியையும் ஏரி நீர் பாயும் நிலங்களையும் அவ்வூர் வாகீஸ்வரருக்கு வரியின்றி கொடையாக வழங்கியுள்ளனர். (...இந்நாயனார் வாகீஸ்வரமுடையாற்கு ஏரி இட்டுக் குடுத்தபடியாவது பசுங்கண்ணி தாழையோமுற்று இதில் நீர் பாஞ்சு நிலங்கண்டிடமெல்லாம் இறையின்றி ஏகபோகமாக இட்டுக் குடுத்தோம்...) மேலும் இந்நிலங்களை பராமரிக்கும் பொருட்டு காணியுடைய பிராமணர் பாலாச்சாரியர் கோத்திரம் பொல்லாத பிள்ளை மகன் மாதேவ பட்டனும் காணியுடைய உவச்சர் பாரசிவர் பூமன் வன்னியனான வீரபத்ர சக்கரவர்த்தியும் உழுது மூன்றில் ஒரு பங்கு வாகீஸ்வரருக்கு கொடுக்க வேண்டும் என்று கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் வழி ஊராளிகள் கோயிலுக்கு நிலங்களை பெருமளவு தானம் கொடுத்துள்ளனர். மேலும் ஒவ்வொரு பகுதிகளில் வாழும் ஊராளிகளின் வாழ்க்கை முறையும் வேறுபட்டுள்ளது. ஏனென்றால் ஈரோடு பகுதிகளில் உள்ள சோழர்கால கல்வெட்டுகளில் ஊராளிகள் கோயில்களுக்குக் கொடை வழங்கும் அளவிற்கு சிறப்புற்றிருந்தனர். ஆனால் இதே போன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சோழர்கால கல்வெட்டில் அரசு ஊராளிகளுக்கு தேவதான நிலங்களை தானமாக கொடுத்து உரிமையும் வழங்கியுள்ளது.

**ஊராளிகளுக்கு நிலவுரிமை வழங்கியமை**

கோயம்புத்தூர் மாவட்டம் பேரூரில் உள்ள பட்டீஸ்வரகோயில் கொங்குச் சோழருடைய பொ.ஆ 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஊராளிகளுக்கு வழங்கப்பெற்ற நிலவுரிமையைக் குறிப்பிடுகின்றது. பேரூர் நாட்டுப் பேரூர் ஆளுடையார் திருவான் பட்டி ஆளுடையார் கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பட்ட பலகைப் புழை என்ற ஊர் நீண்ட நாட்களாக பயன்படுத்தாமல் இருந்தமையால் அந்த ஊரின் நிலம் ஊராளிகளுக்கு மேய்ச்சல் நிலமாக உரிமையாக்கப்பெற்றது. மேலும் இக்கல்வெட்டில் நிலங்களின் எல்லைகள் பற்றியும் இந்நிலங்கள் அனைத்தும் இரண்டு ஊர் பிராமணர்கள் ஏழு பேருடைய நிர்வாகப் பொறுப்பில் இருந்துள்ளன. (...மன்றாட்டு ஒன்றும் ஆக மன்றாட்டு ஏழும் இவ்வூர்க்கு மன்றாட்டாவாதகவும் இவ்வூர் ஊராழ்மை...) காலப்போக்கில் இந்நிலங்கள் பராமரிப்பின்றி போனதால் கால்நடை மேய்ச்சலுக்கு பயன்படுத்த இந்நிலங்களை அரசு சிதக்கெறிச்சி ஊராளிகளுக்கும், குமிலையில் உள்ள ஊராளிகளுக்கும், மதுக்கரை ஊராளிகளுக்கும் மற்றும் அவ்வூரில் குடியேறிய (பூலுவர்க்கு) பழமையான குடிகளுக்கும் உரிமையாக நிலங்களைத் தானமாக கொடுத்துள்ளனர். மேலும் ஆளுடைய தேவர்க்கு ஒவ்வொரு ஆண்டும் நாழி எண்ணையும் நந்தா விளக்கெரிக்க கல எண்ணெய் பரகேசரிகால் என்னும் அளவையால் அளந்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் இதற்கு குற்றம் ஏதும் ஏற்பட்டால் தேவகன்மிகளும் ஸ்ரீ காரியம் செய்வார்களும் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும். மேலும் இவர்கள் இத்தேவதான நிலத்திலேயே வெள்ளி விடங்கவனம் என்னும் இடத்தில் குடியுரிமை பெற்றுக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

**வரி நீக்கியமை**

பொ.ஆ 13 ஆம் நூற்றாண்டு விக்ரம சோழனின் 22வது ஆட்சியாண்டில் ஊரும் ஊராளிகளும் வேண்டிக்கொண்டமைக்கு இறைவனுக்குக் கொடுக்கப்பட்டக் குளம் மற்றும் குளத்து நீர் பாயும் நிலங்களுக்கு வரி நீக்கி கொடுத்த கல்வெட்டாகும். இக்குளம் வெள்ளலூர் போகும் வழியில் இருப்பதாக குறிபிடப்பட்டுள்ளது. (..வெள்ளலூற்குப் போகிற வழியில் தவசி சேரமாந்தெ.... டுக்க வேணு மெந்று ஊருமூராளிகளும் வந்து நம்மை வேண்டும் கொண்டமையில் இகுளம் குளத்தால் நீர்பாஞ்ச...)

**முடிவுரை**

மனித இனமே ஆரம்பக் காலத்தில் வேட்டைச் சமூகத்திலிருந்து மேம்பட்டு வேளாண் குடிகளாக மாற்றம் பெற்று பின்பு சாதிய சமூகமாக உருப்பெற்றச் சமுதாயமாகும். அவ்வகையில் இன்று ஊராளிப் பழங்குடிகள் என்று அடையாளம் காணும் கல்வெட்டுச் சான்றுகள் இவர்கள் வேட்டுவ மரபைச் சேர்ந்த பூர்வகுடிகள் என்பதை உறுதிப்படுத்துகிறது. கல்வெட்டுகள் ஊராளிகளின் கடந்த காலச் சமூகத்தைப் பற்றி எடுத்துரைக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. மேலும் பழமை மாறாமல் தமக்கென தனி பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டு வாழும் மக்களை

ஆதிக்குடி, தொல்குடி, பூர்வகுடி, பழங்குடி என அடையாளப்படுத்துகிறோம். அவ்வாறு ஒரு சமூக வரலாற்றை, களப்பணிச் சென்று செவிவழிச் செய்திகளோடு தொகுப்பது மட்டுமின்றி, சான்றாதாரங்களை வைத்து வரலாற்றைத் தொகுப்பது அவசியமானதாகும். எழுத்துப்பூர்வமான சான்றுகளை வைத்து சமூக வரலாற்றைத் தொகுப்பதனால் சமுதாயத்தில் மறைக்கப்பட்ட பூர்வகுடிகளின் வரலாற்றை நம்பகத்தன்மையுடன் முழுவதுமாக வெளிக்கொணரமுடியும்.

அவ்வாறு அவர்கள் வாழ்ந்த இடமும் அவர்களின் பண்பாட்டுச் சான்றுகளும் காலப்போக்கில் தொல்லியல் சான்றுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

கல்வெட்டுகளிலும் ‘வடகரை நாட்டுப் புன்னத்திலிருக்கும் பாண்டி வேட்டுவரில் புன்னத்தூராளி’ என்று இனக்குழுக்களின் பெயரோடு இணைந்த ஊர்ப்பெயர்களும் குறிப்பிடப்பெற்றுள்ளது. அங்ஙனம் ஊராளிகளின் வாழ்வியல் கூறுகளை ஆராயும் விதமாக அவர்களின் வாழ்விடப் பகுதிகளையும் ஆராய்வது அவசியமானதாகும். பொதுவாகவே இன்று தொல்குடிகள், பழங்குடிகள் என்று அடையாளப்படுத்தப்படும் இனக்குழுக்கள் முன்னொரு காலத்தில் பெரும்பாலும் சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்தவர்களே ஆவர். பின்னர் காலப்போக்கில் நிகழ்ந்த போர்காரணங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் போன்ற சில காரணங்களால் அவர்கள் மலைகளிலும், காடுகளிலும் குடிப்பெயர்ந்துள்ளனர். இக்கூற்றின் வழியே இடைக்காலத்தில் ஊராளிப் பழங்குடிகள் கொங்கு நாட்டில் சமவெளிப் பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதைக் கொங்குக் நாட்டுக் கல்வெட்டுகள் வழி அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. இராசமாணிக்கனார். மா., (1956), *தமிழ் இனம்*, செல்வி பதிப்பகம், காரைக்குடி
2. இராசு.எஸ் மற்றும் அரங்கசாமி. கே., (2011), *கொங்கு களஞ்சியம்*, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, தொ-1.
3. கிருட்டிணன். அ., (2001), சேலம் – நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. சீதாராம் குருமூர்த்தி, (2007) , கிருஷ்ணகிரி மாவட்ட கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.
5. சுப்பராயலு. எ., (2003), *தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி*, சாந்தி சாதனா பதிப்பகம், சென்னை.
6. மகேசுவரன். சி., (2023), *பண்பாட்டு ஆய்வியல் பண்பாட்டியல் குறித்த முழுதளவிய பார்வை*, பாரதி புத்தகாலயம், சென்னை.
7. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-5, (2001), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
8. ஸ்ரீதர்.தி.ஸ்ரீ., (2010), ஈரோடு மாவட்ட கல்வெட்டுகள், தொகுதி-1, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
9. ஸ்ரீதர்.தி.ஸ்ரீ., 2006, கோயம்புத்தூர் மாவட்ட கல்வெட்டுகள், தொகுதி-1, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
10. Tamil lexicon, vol.1, (1982), *University of Madras*, Chennai.


*****